547


# முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

[கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர் இளவழகனார்

| கிளை 9 | துன்முகி, பங்குனி 2உ.-9உ 15, 22-3-57 | தளிர் 22-3 |
|---|---|---|

9-ம் ஆண்டுக்கையொப்பம் (14-10-56 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. | 100 0 0 |

முகவரி:
குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ் நாடு.


3 - MAY 1957 MADRAS

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிப்பது

## வெற்றியுந் தோல்வியும்

அறன் ஒரு புறமும் திறன் ஒரு புறமும் உலகத்தில் வேலை செய்யக் காண்கின்றோம். அறன் என்பது உண்மை; திறன் என்பது ஏனைக் கூறுபாடுகள். உயிர் இவற்றின் இடையில் நின்று, முதலில் திறத்தின் வலிவில் வீழ்ந்தாலும் அறனற்ற திறன் பயனில்லை எனப் பின்னர்த் தெளிந்து, முடிவில் அறத்தின் வழி நின்று மேன்மை எய்துகின்றது. அறனே எப்படியும் இறுதியில் வெல்லும்.

அறன் இறையியல்பு: அன்பொடும் அருளொடும் நிகழ்வது. இறைபணிக்கும் உருக்கத்துக்கும் உரியது. திறன் — ஏனைச்சூழல் வலிமைகள்; அறிவொடும் ஆற்றலொடும் நிகழ்வது. இன்பதுன்பங்கட்கும் விருப்பு வெறுப்புகட்கும் உரியது.

அறனோடு சேராத திறன் நெறி வழுவுதலுங் கூடும். நிலையறுதலுங் கூடும். உலக நிலைகளுக்கு அறனே உயிர்ப்பு! இன்றேல் அனைத்தும் ஆவதுபோல் நின்று அழியும்; வெல்வதுபோல் வீறி வீழும். அறம், அவ் வீறலில்லாமல் அடக்கமாயிருந்து முடிவில் வென்று விளங்கும்.

வாழ்க்கைத் தழைப்பில், திறன், ஒரோவொருகால் மனச் செருக்கினை எழுப்பித் தக்கார் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகாதன செய்வதில் இழுத்துச் செல்லும்போது தக்கார், அதன் இயல்பறிந்து தமது அறன் என்னுந் தகுதியால் அதனை ஒருபொருளாகப் பொருட்படுத்தாமல் பொறுத்துப் புறக்கணித்து விட்டுத் தந் நெறியே நெறிவழுவாது சென்று நிலையில் வென்றுவிடுவர். அவ்வாறன்றி ஒறுப்பாராயின் அவரும் தகாதாராகி வாழ்க்கைச் சிறப்பில் தோற்றுவிடுவர் நிலை சேர்வது இயலாது. எது நல்லது?

இ. அ.

மிகுதியான் மிக்கவை
செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்

மிகுதியான் — செருக்கினால் மிக்கவை செய்தாரை — பொருந்தாதன செய்தவரை, தாம் தம் தகுதியால் வென்று விடல் — தாம் தமது பண்பினால் பொறுத்துக் கடந்து விடுக!

வாழ்க்கையில் முன் இல்லாத சில தழைப்புகள் நேர்ந்து விட்டால் புல்லறிவாளர்க்கு மனச் செருக்குத் தோன்றிவிடும்; தலைகால் தெரியாது அம் மிகுதிப்பாட்டால் என்றதற்கு 'மிகுதியான்' என்றார் அதனால் செய்யப்பட்டவையும் 'மிக்கவை' எனப்பட்டது. அவை தீங்காய் முடிவதனால் மிக்கவை என்பதற்குத் 'தீங்காவன' என்றும் பொருள் கூறலாம்.

தகுதி — செம்மைப்பட்ட பண்பு. இங்குப் பொறுத்தற்குக் காரணமான ஈரவீரத்தை உணர்த்தும். தண்டியாமற் பொறுத்துவிடுதல் தோல்வியாகாது என்பதை 'வென்றுவிடல்' என்பதனால் விளக்கினார். தாமும் அவர்போல் எதிர் ஒறுத்தலே தோல்வியாம் என்பது கருத்து.

''என்கடன் பணி செய்து கிடப்பதே''



யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''

—புறநானூறு.


## முல்லைக் கொடி

| கிளை 9 | துன்முகி, மாசி 15-3-57 | தளிர் 22 |
|---|---|---|


# புலவர் வாழ்ந்த பொன்னிடங்கள்

இங்கிலாந்தில் 'ஸ்டார்ட்டு — போர்டு — ஆன் அவான்' என்ற இடம் ஒரு புனிதமான தலமாகப் போற்றப் படுகிறது, நாள் தவறாமல் ஆயிரக்கணக்கில் ஆங்கிலேயர் அத்தலத்துக்குச் செல்கின்றனர். அங்குக் கோயில் கொண்ட கலைத்தெய்வத்திற்குவண்ண மலர் மாலைகள் சூட்டி வழிபடுகின்றனர். அத்தெய்வத்தின் அருமை பெருமைகளை எல்லாம் எண்ணியெண்ணி நெஞ்சுருகுகின்றனர்.

சுமார் முந்நூறாண்டுகட்கு முன், இங்கிலாந்தின் பேரரசி எலிஸபெத்தின் அவைக்களப் புலவர் பெருமானாகத் திகழ்ந்த சேக்குவீயரின் புகழை அறியாதார் யாவர்? அவர் பிறந்ததும் சுற்றில் மறைந்ததுமான 'ஸ்டார்டு — போர்டு — ஆன் அவான்' என்னும் இடம் கலைத் தெய்வம் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இடமாக மேலை நாட்டவரால் போற்றப் படுகிறது! ஏன், ஆங்கில மொழியின் அருமை எண்ணும் அனைவராலுமே போற்றப்படுகிறது!

முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த புலவரை மேனாட்டவர் போற்றும் நிலை இத்தகையது!

நம் தமிழகம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே எத்துணையோ செழும்புலவர்களைக் கண்டிருக்கிறது.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன்போல் இளங்கோவைப்போல் பூமி தனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும்புகழ்ச்சியில்லை'

என்றெல்லாம் கவியரசர் பாரதியார் சொல்லியிருப்பவை தமிழகத்தின் பெருமையைத் தெற்றென விளக்குகின்றன.

கவிஞர் மரபு கவிஞருக்கே புலனாகும், பாம்பறியும் பாம்பின் கால்' என்பது பழமொழி. கவிஞர் பாரதியார் அருமையறிந்து பாராட்டியிருப்பவை அறியும் போது நம்மவர் அவை வருந்தாம் மகிழ்கின்றனர், அவ்வளவோடு அவர்கள் செயல் முற்றுப் பெறுகின்றது. அப் பாராட்டுக்குரிய புலவர்களைப்பற்றி மேலும் அறிய வேண்டுவன வற்றை நுணுகி ஆராய்ந்துணர வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் எழுவதில்லை. இன்னும் சொல்வதானால் இத்தகைய ஆராய்ச்சிகளெல்லாம் இக்காலத்துக்கும் சூழ்நிலைக்கும் பொருந்தா என்று கூடக் கூசாமல் கூறுவர் கடும்புயலிற் சிக்கிய துரும்புபோல ஓயாமற் சுழலும் அவர்கள் உள்ளமெலாம் பாழுக் கலைந்து பதங்கெடுவதிலேயே ஈடுபடுவதால் இத்தகைய அரிய பெரிய சிந்தனைகட்கு இடமின்றிப் போகிறது.

மேனாட்டான் ஒரு நூலைக் கற்கத் தொடங்குமுன், அவ்வாசிரியன் புகழை முன்னுரை வாயிலாக உணர்வதோடு மட்டும் அமைதி கொள்வதில்லை அவ்வாசிரியன் வாழ்க்கையை நுட்பமாக உணர்வதற்கேது வான வேறுபிற நூல்களை ஆராய்ந்தும் அப்புலவன் வாழ்ந்த இடத்தையும் சூழ்நிலையையும் நேரிற் கண்டு மகிழ்ந்தும் நூலின் அகச் சான்றுகளோடு அப்புலவன் வாழ்க்கையியல்புகளை ஒட்டிப் பார்த்தும் இன்புறுவான் ஆகவே புலவர் வாழ்ந்த இடங்களைப் பொன்னைக் கருதிப் போற்றும் பண்பு மேனாட்டில் வேரூன்றியிருக்கிறது

நம் நாட்டிலோ நிலைமை வேறுவகை. ஏட்டில் புலவர்களைப் பற்றிக் கற்றறிந்த ஒரு சிலர் தவிர மற்றவர்க்கு அவர்களைப் பற்றி எண்ணவே நேரமிருப்பதில்லை நம்மைச் சூழ்ந்துள்ள பல இடங்களில் பல புலவர் பெருமக்கள் வாழ்ந்திருந்ததாக நூல்கள் நுவல்கின்றன

பொன் விளைந்த களத்தூரில தொண்டை மண்டல சதக ஆசிரியர் படிக்க சுப் புலவர் பிறந்து வாழ்ந்தார்

புகழேந்திப் புலவர் வாழ்ந்த இடமும் அதுவே. பாலாற்றங் கரைப் பூதூரில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் [illegible] வாழ்ந்தனர். பூங்[illegible]றம் என்ற ஊரில் கணியன் என்ற புலவர் வாழ்ந்ததாகத் தெரிகிறது. எத்துணையோ புலவர்கள் பிறந்த இடங்கள் அவர்கள் பெயர்களோடு வழம் அடைமொழிகளாற் புலனாகின்றன.

(7-ம் பாக்கம் பார்க்க)

## சமயப் பகுதி - அருள் வலிமைக்கு

# உள்ளொளிர் இறைவன் உடலிடங் கொண்டான்

(வே. ந. நாராயணன்)

மனிதவாழ்க்கையில் துன்பம் ஏற்படுவதற்குக் காரணம் உள்ளமும் உடலும் ஒன்றுமையே. உள்ளமும் உடலும் ஒரே நிலையில் - ஒரேபோக்கில் செயலாற்றுமெனின், ஒரே தன்மையையே விரும்பி நிற்குமெனின், மேற்கொள்ளும் செயல் தீயதெனினும் நல்லதெனினும் இன்னல் ஏற்படாது. தீயதையே இலட்சியமாகக் கொண்ட ஒருவன்கூட, அதனால் வரும் இன்னலையும் உள்ள, உடல் உறவால் இன்பமாக எண்ணித் தியாகஞ்செய்கின்றான். தீயதால் இன்னல் ஏற்படுவதானால், இது அவனின் உள்ளமும் உடலும் இணையவில்லை என்பதையே காட்டும்.

உளளமும் உடலும் இயைந்தால் தீய செயலும் நமக்குத் துன்பம் விளைவிக்காது என்பதனாலேயே, சிற்றின்பம் விரும்பித் தீய செயலில் தலைப்பட எண்ணுவதானால் அது அவனை மனித இனத்தினின்றும் தாழ்த்தி விடும் என்பதை உணர வேண்டும்.

"தக்க வின்ன தகாதன
வின்ன வென்று
வொக்க வுன்னல ராயின்
உயர்ந்துள
மக்களும் விலங்கே"

என்கின்றார் கம்பர்.

ஆகவே, நலத்தை எண்ணவும் செய்யவுமே உள்ள உடலை இயைக்க வேண்டும் ஆனல் உடல் உள்ள இயைவு, எந்த நேரமும் எல்லோருக்கும் நேர்வது அரிது.

உள்ளம் ஓவியக் கலையில் விருப்பங் கொண்டால், உடலின் கூறுகளாகிய ஐம்பொறிகளும் அதையே விரும்ப வேண்டும். பார்க்கின்ற பொருளூடு ஓவியத்தைக்காண வேண்டும். கேட்கின்ற ஒலிகளில் ஓவியத்தின் சிறப்பையே கேட்க வேண்டும். தொட்டுணரும் பொருள்களாலும், மோந்துணரும் பொருள்களாலும், சுவைத்துணரும் பொருள்களாலும் ஓவியமே நினைவு படுத்தப்பட வேண்டும். உள்ளம் 'நடக்க வேண்டும்'' எனக்கருத, உடல் அதற்கு ஒத்து வராதெனின் துன்பமே.

ஒரே நேரத்தில், ஓரிடத்தில் பேராசிரியர் ஒருவரின் சொற்பொழிவு நடைபெறவிருக்கின்றது; மற்றோரிடத்தில் ஒருவரின் நடனம் நடைபெறவிருக்கின்றது எனவைத்துக் கொள்வோம் (இங்கு இந்நிகழ்ச்சிகளில் உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. இரண்டும் பயனுள்ளவையே. மனப் போராட்டத்தை விளக்கவே அவ்வுதாரணத்தைக் கூறுகின்றேன்) ஒருவன் இவைகளைக் காண விரும்புகின்றான். உள்ளமோ பேராசிரியரின் சொற்பொழிவைக் கேட்க விரும்புகின்றது. ஆனல் உடலோ [கண், செவிபோன்ற புலன்களை யுணர்த்தும்] அவளின் நடனத்தைக் காணவும், பாட்டைக் கேட்கவும் விரும்புகின்றது. இப்போதுதான் உள்ளத்திற்கும் உடலுக்கும் போராட்டம் எழுகின்றது. இரண்டும் இங்கு வேறுபடுகின்றன. உள்ளம் அறிவாலும், உடல் ஆரவாரங்களாலும் ஈர்க்கப்படுகின்றன. ஆரவார ஈடுபாட்டில் வேட்கைகொள்ளும் புலன்களாலாய உடலிற்கும், அறிவு ஒழுக்க ஈடுபாட்டில் அவாக் கொள்ளும் உள்ளத்திற்கும் போராட்டம் எழுவதின் காரணமாகத்தான் துன்பம் ஏற்படுகின்றது. ஆனல், இரண்டும் ஒரே போக்கில் செல்லுமானல் எந்தப் போக்காயினும் சரி போராட்டமே யில்லை. துன்பமும் இல்லையல்லவா?

உள்ளமானது, பிற பெண்களைப் பற்றித் தவருக எண்ணக் கூடாது; எனக்கருதும்; ஆனல் கண், பார்க்கும் பெண்களைப் பற்றிச் சில சமயங்களில் தவருக எண்ணித் துயரையுண்டு பண்ணவுங்கூடும். கண்களும் உள்ளத்தைப் போன்றே நன்னிலையிலிருந்தால், பிறமாதைத்தாயாகப் பார்க்கவோ, சகோதரியாகக் காணவோ தான் செய்யும் அல்தன்றி அறிவின் வழிநில்லும் உள்ளம் நேர்மையின் சார்பாகவும், அற்ப ஆரவார இன்பத்தின் வழிநில்லும் உடற்புலன்களுள் ஒன்ருகிய கண், கயமையின் சார்பாகவும் சென்றால் இரண்டிற்கும் போராட்டந்தான்.

ஒன்று, உள்ளம் போகும் வழி கண்ணே, அன்றி கண்போகும் வழி யுள்ளமோ இணையவேண்டும் அவ்வாறு ஒன்றில் ஒன்றை இணையவைக்க எண்ணும் போது. ''தீதொரீஇ நன்றின் பாலுய்ப்ப தறிவு'' என்னும் குறளடியை நினைவிற்கொண்டு செயலாற்ற முனைதல் வேண்டும்.

[தொடரும்]

கலைப் பகுதி — உள வலிமைக்கு (முன் தொடர்ச்சி)

# சோழர்காலத் தேர்தல் முறை

— முத்து வடிவேல் —

குடத்தில் இருக்கும் ஓலைக்கட்டுகளில் ஒன்றினை எடுத்து அதனைப் பிரித்து வேறு ஒரு குடத்தில் இட்டு நன்றாகக் குலுக்குவார்கள். பின் அச்சிறுவன் அதில் உள்ள சீட்டுகளில் ஒன்றை எடுப்பான். உடனே அந்தச் சீட்டில் உள்ள பெயர் வாசிக்கப்பட்டுத் தேர்ந்தவரின் பெயர் அனைவருக்கும் அறிவிக்கப்படும். இதேபோன்று முப்பது ஓலைக்கட்டுகளையும் செய்து முப்பது உறுப்பினர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப் படுவர்.

இவ்வாறு செய்து முடிந்தபின் மறுமுறையும் அந்த முப்பது கட்டுகளையும் குடத்தில் இட்டுக் குலுக்குவார்கள். மறு முறையும் ஒரு சிறுவனை விட்டு அதில் ஒவ்வொரு கட்டிலும் ஒவ்வொருவராகப் பன்னிரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர்.

ஆக ஒவ்வொரு ஊர்ச், சபையிலும் நாற்பத்திரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். சம்வத்சரவாரியார், தோட்டவாரியார், ஏரிவாரியார், பொன்வாரியார், பஞ்சவாரியார் ஆக ஐந்து பிரிவினர்களாகப் பிரிக்கப் படுவார்கள்.

மேற்கூறியவாறு பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினருக்கும் பல கடமைகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்குரிய கடமைகளின்றும் பிறழாமல் நடந்து கொள்வர். தாம் தேர்ந்தெடுக்கப் பட்ட ஓராண்டுகாலம் வரையிலும் தம் வேலையை நடத்துவதற்கு அவர்களுக்கு யாதொரு தடையும் கிடையாது.

சம்வத்சரவாரியார் பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களே சிறந்த அறிவும், உலக அனுபவமும் உடையவர்களாய் இருந்தனர். ஊர்ச்சபைக்கு வரும் வழக்குகளைத் தீரவிசாரித்துநியாயம் வழங்குவது அவர்களின் தலையாய கடனாகும். உயிர்க் கொலை செய்யவும் (தூக்குத்தண்டனை விதிக்கவும்) அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. ஊரைச் சுற்றிப் பார்த்து நன்மை தீமைகளை நாடிச்செய்வதும் அவர் கடனாகும். கோயில்களின் மேற்பார்வையும் அவர்கள் செய்து வந்தனர்.

ஏரிவாரியார் பிரிவினருக்கு நீர் நிலைகளின் கரைகளைப் பழுது வராமல் பாதுகாத்தலும், பழுது ஏற்படின் அவற்றைச் சீர் செய்தலும், ஏரிகளுக்கு வருவாய்க்கால் வெட்டுதல், ஆற்று நீர், ஏரி நீர் இவைகளை விளைநிலங்களுக்குப் பாசனவசதி செய்தல் ஆகிய உழவர்களின் நன்மைக்கான காரியங்கள் அனைத்தும் அவர்கள் பொறுப்பில் இருந்தது.

தோட்ட வாரியார் பல வகையான நிலங்களின் தன்மைகளை ஆராய்ந்து அவைகளின் தரத்திற்கேற்ப இறைப்பணம் நியமித்தல், அவ்வப்போது நிலங்களில் பயிரிடப் படும் தானிய வகைகளைக் கணக்கெடுத்து இறை வசூலிக்க உதவுதல், ஆகிய நிலங்களின் தன்மைகளைப் பொறுத்த வரையில் அவர்களின் மேற்பார்வையில் இருந்தது.

பொன் வாரியார்களின் பொறுப்பு நிதிப்பகுதி நாணயவகைகளைப்பற்றிய பொறுப்புகள் அனைத்தும் அவர்கள் பொறுப்பில் இருந்தது இறைப்பணம் யாவும் இவர்களின் மூலமாகத்தான் அரசாங்கத்திற்குச்சென்று வந்திருக்க வேண்டும். என்பதையூகிக்க இடம் இருக்கிறது.

பஞ்சவாரியார் கடமை, கல்வெட்டுகளில் இன்னதெனத் தெரிவிக்கப்படவில்லை. ஆயினும் அவர்களின் பெயர்களைக் கொண்டே அவர்களின் கடமையை முடிவுகட்டலாம். நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகள் செய்வதற்காகவே அவர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க.)

## ஆர்வலர், பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

ஆ. வ – எ. 521
திரு எஸ். பக்தவச்சல செட்டியார் அவர்கள்
11, யாதவாள் தெரு,
அமைந்தகரை, சென்னை–29.

ஆ. வ – எ. 522
திரு பெட்டு பத்மநாப செட்யார் அவர்கள்
155, வால்டேக்ஸ் ரோடு,
பார்க் டவுன், சென்னை.

ஆ. வ எ. 523
திரு சுந்தரம் அவர்கள்
40, முல்லாசாயபு தெரு,
சென்னை-1.

ஆ. வ – எ. 524
திரு ஜெ. சுப்பிரமணியம் அவர்கள்
25, சந்தாசாகிப் தெரு,
சென்னை-14.

ஆ. வ எ. 525
திரு கே. தெய்வசிகாமணி அவர்கள்
9, நாட்டு சுப்பராய முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை–4.

ஆ. வ – எ. 526
திரு எஸ். திருநீலகண்டம் அவர்கள்
32, மாவடி விநாயகர் கோவில் தெரு,
இராயப்பேட்டை, சென்னை–14.

ஆ. வ – எ. 527
திரு என். கிருஷ்ணசாமி அவர்கள்
554, டி. எச். ரோடு,
வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

ஆ. வ – எ. 528
திரு ஏ. சேஷாசலம் அவர்கள்
27, சந்தா சாகிப் தெரு.
சென்னை-14.

ஆ. வ – எ. 529
திரு எம். ஆர். சுப்பிரமணியம் அவர்கள்
8, முதல் தெரு.
கோபால புரம், சென்னை–6.

ஆ. வ – எ- 530
திரு ஆர். ராமலிங்கம் அவர்கள்
22, அப்பர்சாமி கோயில் தெரு.
மயிலாப்பூர், சென்னை–4.

ஆ. வ – எ. 531
திரு எம். மதுரை அவர்கள்
30, துளசிங்க நாயக்கன் தெரு,
புதுப்பேட்டை, சென்னை.

ஆ. வ – எ, 532
திரு ஆர். நடராாசன் அவர்கள்
1, ராஜ அநுமந்தலாலா தெரு.
திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆ, வ – எ. 533
திரு டி. பி. அழகர் அவர்கள்
23, சிங்கராச்சாரியார் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

ஆ. வ – எ. 534
திரு சி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
127, ஐ டைப்ஸ்பிளாக்,
ஷெனாய் நகர்,
கீழ்ப்பாக்கம் அஞ்சல்,
சென்னை-.

ஆ. வ - எ. 535
திரு டி. மோகன் அவர்கள்
7, பாளையக்காரத் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.

ஆ. வ - எ. 536
திரு லிங்கம் அண் கோ.,
304, தம்புசெட்டித் தெரு,
சென்னை-1.

ஆ. வ - எ. 537
திரு பி. கே. சவுந்தரராசன் அவர்கள்
31, வெங்கடாசல முதலி தெரு
பி. டி. சென்னை.

ஆ. வ - எ. 538
திரு வே. வீ. முத்து அவர்கள்
3 பெரியண்ண மேஸ்திரி தெரு
பெரிய மெட்டு, சென்னை-3.

ஆ. வ - எ. 539
திரு பி. எஸ். ஜெயசந்திரன் அவர்கள்
152A, தங்கசாலைத் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை

ஆ. வ - எ. 540
திரு எம். விட்டல் ராவ் அவர்கள்
8. லாபண்ட் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2

ஆ. வ - எ. 541
திரு சி. சிவசங்கரன் அவர்கள்
95, டி. எச். ரோடு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21,

ஆ. வ - எ. 542
திரு எஸ். சுப்பிரமணியம் அவர்கள்
தலைமை ஆசிரியர்
கார்ப்பரேஷன், ஆண் பாடசாலை,
லாயிட்ஸ் தெரு,
சென்னை.

ஆ. வ - எ. 543
திரு தேவசந் எம். ஷா அவர்கள்
110, சைடனும்ஸ் தோட்டம்,
சென்னை-7.

ஆ. வ - எ. 544
திரு ஏ. ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள்
20, வெங்கடாசல முதலி தெரு,
பி. டி. சென்னை-7.

ஆ. வ - எ. 545
திரு யு ரங்கநாதன் அவர்கள்
3, மெயின் ரோடு ஜாக்கரையா காலனி
கோடம்பாக்கம், சென்னை-24.

ஆ. வ - எ. 546
திரு ஷா. டிம்பர் டிரேடிங் கோ.,
55 பேஸின் பிரிட்ஜ் ரோடு,
சென்னை-21

ஆ. வ - எ. 547
திரு கே. பி. அலுப்பி அவர்கள்
65, பேஸின் பிரிட்ஜ் ரோடு,
சென்னை-21.

ஆ. வ - எ. 548
திரு எஸ் எம். மதுரை அவர்கள்
அஸிஸ்டெண்ட் எஞ்சினீயர்
கார்ப்பரேஷன், சென்னை.

ஆ. வ - எ. 549
திரு எம். எஸ். கிருஷ்ணசாமி அவர்கள்
41, சீனிவாசன் தெரு,
மைலாப்பூர், சென்னை-4.

ஆ. வ - எ. 550
திரு பி. கன்னையாபிரசாத் அண் கோ.,
129, வால்டேக்ஸ் ரோடு,
சென்னை-1,

ஆ. வ - எ. 551
திரு கே. எஸ். கோவிந்தராஜுலு அவர்கள்
104, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை-1

ஆ. வ - எ. 552
திரு. ராம் அண் கோ,
315, தம்புசெட்டித் தெரு,
சென்னை-1.

ஆ. வ - எ. 553
திரு எம். சுவாமி நாதன் அவர்கள்
5, சுப்பிரமணியன் தெரு,
புரசை, சென்னை-7.

ஆ. வ - எ. 554
திரு அ. சம்பந்தம் அவர்கள்
19, அய்யா முதலி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

ஆ. வ - எ. 555
திரு சி. ஆர். கோவிந்தராசப் பிள்ளை அவர்கள்
45B, புரசவாக்கம் ஐரோடு,
சென்னை-7.

ஆ. வ - எ. 556
திரு எம். செலபதி ராவ் அவர்கள்
17, கார்ப்பரேஷன் குவார்ட்டர்ஸ்,
இராயபுரம், சென்னை-13.

ஆ. வ - எ. 557
திரு செ. ஜம்புலிங்கம் அவர்கள்
21, சமுத்ர முதலி தெரு,
பார்க்டவுன், சென்னை

ஆ. வ - எ. 558
திரு கோ. நா. மார்க்கபந்து அவர்கள்
4, பாஸ்கரபுரம்,
பீமண்ணப்பேட்டை, சென்னை.

ஆ. வ - எ. 559
திரு க. மாணிக்கவாசகம் அவர்கள்
53, சாமி செட்டித் தெரு,
எழும்பூர், சென்னை-8.

ஆ. வ - எ. 560
திரு கே. கந்தசாமி அவர்கள்
112, அவதானம் பாப்பையர் ரோடு,
சூளை, சென்னை-7.

ஆ. வ - எ. 561
திரு எம். யூ. ராதாகிருஷ்ணன் அவர்கள்
13, பரிபூர்ணவிநாயர் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-4,

ஆ. வ - எ. 562
திரு ஏ. தாமோதரம் அவர்கள்
15, பெருமாள் கோயில் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15,

ஆ. வ - எ. 563
திரு ஏ. மோகன கிருஷ்ணன் அவர்கள்
34, தெற்கு மாதா தெரு,
மைலாப்பூர், சென்னை-4.

ஆ. வ - எ. 564
திரு எஸ். எஸ். சுந்தரம் அவர்கள்
324, மிண்ட் தெரு,
சென்னை-1.

ஆ வ - எ. 565
திரு எம். திருவேங்கடம் அவர்கள்
1-343 மிண்ட் தெரு,
சென்னை-1.

ஆ வ - எ. 566
திரு சி. ஆர். ஜெயராம் அவர்கள்
55-56, நாட்டு பிள்ளையார் கோயில் தெரு,
சென்னை-1.

ஆ வ - எ. 567
திரு சம்பந்தமூர்த்தி அவர்கள்
111, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5,

ஆ வ - எ. 568
திரு எ. கே கிருஷ்ண மூர்த்தி
32, முல்லா சாஹிப் தெரு,
சென்னை-1.

ஆ. வ - எ. 569
திரு சி. எஸ். பாலசுப்பிர மணியம் அவர்கள்
1-38, ஆயலு முத்தைய முதலி தெரு.
சென்னை-1.

ஆ. வ - எ. 570
திரு எஸ். நாச்சி முத்து அவர்கள்
25, வெங்கடேச நாயக்கன் தெரு,
சென்னை - 1

ஆ வ - எ. 571
திரு எஸ். ஆர். எ. ராமசாமி முதலியார் அண் கோ.,
ஜவுளி வியாபாரம்,
எட்டப்பாடி (அஞ்சல்)
சேலம் மாவட்டம்

ஆ. வ - எ. 572
திரு பி. எஸ். ஈ. ஸ்வரபாகவதர் சன்ஸ்,
பட்டு ஜவுளி வியாபாரம்,
மானம்புச் சாவடி,
தஞ்சாவூர்,

ஆ. வ - எ. 573
திரு பி. செல்வநாத செட்டியார் அவர்கள்
11, முருகப்ப ஆசாரி தெரு,
சேப்பாக்கம், சென்னை,-5.

ஆ, வ - எ. 574
திரு தி. நா. ராமச்சந்திரன் அவர்கள்
29, பிள்ளையார் கோயில் தெரு,
திரு வேட்டீஸ்வரன் பேட்டை
சென்னை-5.

ஆ. வ - எ, 575
திரு சி. எ. கோவிந்த ராஜாலு நாயுடு அவர்கள்
குவார்ட் டர்ஸ், மூர்மார்க்கெட்,
சென்னை- 3.

ஆ. வ - எ. 576
திரு எம். மதுரை முதலியார் அவர்கள்
மூர்மார்க்கெட்,
வெஜிடபிள் சப்ளையர்,
சென்னை -3.

ஆ. வ- எ. 577
திரு மீனாட்சியம்மாள் அவர்கள்
மூர்மார்க்கெட்,
சென்னை-3.

ஆ வ- எ, 578
திரு நடேச செட்டியார் அவர்கள்
156-7, புத்தக வியாபாரம்,
மூர்மார்க்கெட்,
சென்னை -3.

ஆ வ- எ, 579
திரு சி. எம். வஜ்ரவேலு முதலியார்
11, தேவராய கிராமங் லேன்,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை-2.

ஆ வ- எ 580
திரு எம். சன்முகம் அவர்கள்
18, குட்டி தம்பிரான் தெரு,
புளியாந் தோப்பு,
பட்டாளம், சென்னை.

ஆ வ - எ 581
திரு டி. ஆர். ராவ் அவர்கள்
123, வீராசாமிப்பிள்ளை தெரு,
மார்பலம், சென்னை 17.

ஆ. வ - எ. 582
திரு துரைசாமிப்பிள்ளை அவர்கள்
1-A, கூவம் ஆறுரோடு
சிந்தாதிரிப் பேட்டை சென்னை-2.

## ஆர்வலர், பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

ஆ. வ - எ. 583
திரு டி பி கோபால் அவர்கள்
12, டேகாஸ்டர் ரோடு
(பேட்டர்சன் லேன்)
பெரம்பூர், சென்னை-11

ஆ. வ - எ. 584
திரு தண்டு கோவிந்தராசலு
அவர்கள்
104, ஷெனாய் நகர்
சென்னை 30.

ஆ. வ - எ. 585
திரு ஆ. கந்தசாமி அவர்கள்
6 A, முதல் தெரு
அஜீஸ் நகர்
சென்னை-24

ஆ - வ எ. 586
திரு மு. ஜகந்நாதன் அவர்கள்
சமாதானம் ஹவுஸ்
ரங்கநாதம் அவென்யூ
கிழப்பாக்கம் சென்னை-10

ஆ. வ - எ. 587
திரு எம். ஏ. முத்துக்குமாரசாமி
அவர்கள்
25, ராமகிருஷ்ணன் தெரு
செலக் டாக்கீஸ் சமீபம்,
சென்னை-1.

ஆ. வ - எ. 588
திரு டி. வி. ரங்கசாமி அவர்கள்
26 டி. எஸ். வி. கோயில் தெரு
மயிலாப்பூர் சென்னை-1,

ஆ. வ - எ. 589
திரு ஜி. கிருஷ்ணன் அவர்கள்
2-27 ரண்டால்ஸ் ரோடு
வேப்பேரி சென்னை-7

ஆ வ - எ. 590
திரு எம். ஏ. கரீம் அவர்கள்
42, ஹாரிஸ் ரோடு
புதுப்பேட்டை
சென்னை,

ஆ. வ - எ. 591
திரு எ. ஸ்ரீராமுலு அவர்கள்
1-46, பெருமாள் பிள்ளை தெரு
வேப்பேரி சென்னை-7

ஆ. வ - எ. 592
திரு பி. பாலசுப்ரமண்யம் அவர்கள்
"ஜலடா" நியூ ஆவடி ரோடு
K P S அருகில்,
கிழ்ப்பாக்கம்

ஆ. வ - எ. 593
திரு பி. எஸ். தாமோதரம் அவர்க
47, கிழவப்ப செட்டி தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2

ஆ. வ - எ, 594
திரு ஏ. வெங்கட்டரங்கம் அவர்கள்
சார்ஜ் மேன், பேட்டேர்ன் ஷாப்
சித்தரஞ்சன் லோகோ ஒர்க்ஸ்
மேற்கு வங்காளம்

ஆ. வ - எ. 595
திரு கே. ஜி. நடேச முதலியார்
அவர்கள்
ஜவுளி வியாபாரம்,
செல்லபெருமாள் முதலி தெரு
சோளிங்கபுரம்,
வட ஆற்காடு மாவட்டம்

ஆ வ - எ 596
திரு ஸ்ரீ. ஞானம்பிகை டாக்கீஸ்
திருச்செங்கோடு,
சேலம் மாவட்டம்

ஆ. வ எ, 597
திரு பி. எஸ். எஸ். பொம்மண்ண
செட்டியார் அண்டு சன்ஸ்
ஜவுளி வியாபாரம்.
குகை சேலம்,

ஆ, வ - எ. 598
திரு பி.வி. ஆறுமுக நாயகர் அவர்கள்
28, ஆரியமுத்து மேஸ்திரி வீதி
சூளை சென்னை-7

ஆ. வ - எ. 599
திரு ஆர். எஸ். சுந்தரம் அவர்கள்
131, மூர்மார்கெட். சென்னை-3

ஆ. வ - எ. 600
திரு பி. ஜெய கோபால் அவர்கள்
25, ஜெனரல் முத்தையாமுதலி தெரு
சென்னை-1

ஆ. வ - எ. 601
திரு கே. சுப்பைய நாயுடு அவர்கள்
2, பத்மநாபபிள்ளை தெரு
சென்னை-24.

ஆ. வ எ- 602
திரு யூசப் அலி அவர்கள்
ஓவர்சீர் ஆபிஸ், கச்சேரி ரோடு
மைலாப்பூர். சென்னை-4.

ஆ, வ - எ. 603
திரு எ. வி. சிவராம கிருஷ்ணன்
அவர்கள்
48. டி. எஸ். வி. கோயில் தெரு
மைலாப்பூர், சென்னை-4.

ஆ. வ - எ. 604
திரு சுப்பிரமணியம் அவர்கள்
22,கைலாச நாதர்கோயில் தெரு
பெரிய நத்தம்
செங்கற்பட்டு

ஆ. வ - எ- 605
திரு பி. கிருஷ்ணசாமி அவர்கள்
14, எ. கோபால கிருஷ்ணன் ரோடு
தியாகராயநகர் தெரு
சென்னை

ஆ. - வ எ. 606
திரு சி. எம். ராஜ கந்தசாமி
அவர்கள்
"ராஜகிரகா"
வாத்தியார் கந்தபிள்ளை தெரு
சூளை, சென்னை

ஆ, வ - எ. 607
திரு கே. கிருஷ்ணப்பா அவர்கள்
44, அப்புமுதலி தெரு
மைலாப்பூர், சென்னை-4,

ஆ, வ - எ. 608
திரு ஆர். சண்முக சுந்தரம் அவர்கள்
10, 2வது தெரு,
சௌராஷ்டிர நகர், சூளை மேடு
கோடம்பாக்கம்,
சென்னை-24.

ஆ. வ - எ, 609
திரு ஜே. சி. நாகலிங்கம் அவர்கள்
9 விஜயநாராயணதாஸ் தெரு
மவுண்ட்ரோடு சென்னை -1

ஆ. வ - எ.610
திருசி. எல். சுந்தரராசன் அவர்கள்
1-19. கிருஷ்ணப்பநாயக்கன்
அக்ராரம் தெரு சென்னை-1

ஆ. வ – எ. 611
திரு கு. பார்த்தசாரதி அவர்கள்
35. பீமண்ணமுதலி தெரு
பீமன் பேட்டை
சென்னை–18.

ஆ. வ – எ. 612
திரு என். சின்னதுரை நாயகர் அவர்கள்
21, தெற்குமாதா தெரு
மையிலாப்பூர், சென்னை–4,

ஆ. வ – எ. 613
திரு எஸ். தருமலிங்க நாயகர் அவர்கள்
45. அப்பா முதலிதெரு,
மைலாப்பூர், சென்னை–4

ஆ. வ – எ. 614
திரு ப. நாராயணசாமி அவர்கள்
153, லிங்கி செட்டி தெரு,
சென்னை-1.

ஆ. வ – எ. 615
திரு தா. சீனிவாச நாயகர் அவர்கள்
57, சோலையப்பன் வீதி
வண்ணையும்பதி சென்னை–21

ஆ. வ – எ. 616
திரு பி. எம். தோலியா அவர்கள்
3, நராயண செட்டி சந்து
சென்னை– 3.

ஆ. வ – எ 617
திரு பி. ஆர். முத்துக்குமாரசாமி அவர்கள்
31, லிங்கிசெட்டிதெரு
சென்னை - 1

ஆ. வ – எ 618
திரு ஜி. சுப்பராயன் அவர்கள்
32, இருசப்ப மேஸ்திரிதெரு,
புதுவண்ணரைப் பேட்டை,
சென்னை-21.

ஆ. வ – எ, 619
திரு ஞான சுந்தரம் அவர்கள்
28, கன்னியப்ப நாயகர் காலனி
சென்னை-21.

ஆ. வ – எ, 620
திரு ச. வீராசாமி அவர்கள்
செயலாளர் திருவள்ளுவர் கழகம்
தெற்கு போக்சாலை
தென் தியாகராயநகர்
சென்னை-17.

ஆ. வ – எ. 621
திரு எ. எஸ். அப்பாஜி ரெட்டியார் அவர்கள்
அம்மணங் கோயில், நெல்லிக்குப்பம்
அஞ்சல் தெ. ஆ. மாவட்டம்

ஆ. வ – எ. 622
திரு எல். என். சுந்தரராஜய்யர் சன்ஸ்
ஜவுளி வியாபாரம்
ஜடாமுனி கோயில் கிழக்கு தெரு,
மதுரை,

ஆ. வ – எ, 623
திரு வி. எ. கோதண்டராமன் செட்டியார் அவர்கள்
27. காளத்தி செட்டி தெரு,
ஆரணி வடஆற்காடு மாவட்டம்.

ஆ. வ – எ. 624
திரு ஜே. நரசிம்மலு அவர்கள்
36 முத்து கிருஷ்ணன் தெரு,
கொண்டி தோப்பு, சென்னை–1

ஆ வ – எ. 625
திரு வி. ஆர். ராஜன் அவர்கள்
40, ரங்க விலாஸ்,
பைஸ் சர்ச் ரோடு, சென்னை

ஆ வ – எ. 626
திரு ஆர். கோவிந்தராஜ் அவர்கள்
5, காந்தி ரோடு, பண்ருட்டி

ஆ, வ – எ. 627
திரு எ. ரத்தினசபாபதி செட்டி
அவர்கள்
37, எக்மோர் ஐரோடு,
சென்னை–8

ஆ, வ – எ. 628
டி. சுப்பிரமண்ய செட்டியார்
அவர்கள்
40, ஆலந்தூர் சுப்பிரமணிய
ஆசாரி தெரு,
குனை, சென்னை–7

ஆ. வ – எ. 629
திரு எ. ராஜமாணிக்கம் செட்டியார்
அவர்கள்
92, எழும்பூர் ஐரோடு
சென்னை–8

ஆ. வ – எ. 630
திரு ச. சுப்பிரமணிய முதலியார்
அவர்கள்
3 பி, பள்ளிக் கூடம் சாலை,
சென்னை–11

ஆ. வ – எ. 631
திரு தி.வ. சிவக் கொழுந்து அவர்கள்
4, படேல் சாலை,
பெரம்பூர் சென்னை–11

ஆ. வ – எ. 632
திரு டி. ராமலிங்கப்பா அவர்கள்
221, நேதாஜி சுபாஷ்
சந்திரபோஸ் ரோடு,
G. T. சென்னை-

ஆ. வ – எ. 633
திரு ஆ குழந்தைவேல் அவர்கள்
7, மீனாக்ஷி தெரு,
பெரம்பூர், சென்னை–11

ஆ. வ – எ. 634
திரு பா. ச. பரமசிவம் அவர்கள்
சிவம் அண்டுகோ, பம்பு பஜார்
பெங்களூர் சி.டி.

ஆ. வ – எ. 635
திரு வி. ருத்திர கோடி
C–O ராஜிவேலு,
69, புரசவாக்கம் ஐரோடு,
சென்னை–10

ஆ. வ – எ 636
திரு சி. டி. எத்திராசலு அவர்கள்
1, ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் தெரு,
சென்னை-1.

ஆ. வ – எ. 637
திரு சுபத்திராமன்ருலால் அவர்கள்
32, நாகப்பையர் தெரு,
திருவேட்டீசுவரன் பேட்டை,
சென்னை –

ஆ. வ – எ. 638
திரு சுலோசரு ஜகன்நாத் அவர்கள்
32, நாகப்பையர் தெரு,
திருவேட்டீசுவரன் பேட்டை,
சென்னை

## மொழிப் பகுதி — அறிவு வலிமைக்கு

# துன்பம் ஏன்?

(மணி)

வாழ்க்கை வாழ்வதற்கே என்று இன்று பலர் பொது மேடைகளிலே, நண்பர்களிடத்திலே எடுத்துப் பேசியும் அடித்துக் கூறியும் வருகின்றனர்.

எடுத்துக் கூறுபவர்களும், அடித்துப் பேசுபவர்களும் செயலிலே காட்டுகிறேன் என்று மார்தட்டுபவர்களும் எத்துணை அளவிலே அவர்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி சீரோடு வாழ்ந்தார்கள் எனக் காணப்புகுவோமானால் சொல்லிய வீரர்கள் தங்கள் வாழ்க்கையை எடுத்து நடத்தும் போது பலபேர் வெற்றி பெற்றார்கள் என்று கூறுதற்கே இடமில்லாமற் போகிறது; அதுமட்டுமன்று. சொல்லியதை மறக்கும் நிலையும், வறுமையிலே உழந்து வாடி வதங்கும் நிலையும் கூட அடைந்து விடுகின்றார்கள் எனலாம். வறுமை நிலை ஏற்படுவதும், அதனால் துன்புறுவதும் மிகவும் பெருகிவிட்டது.

இன்று நாட்டிலே காணும் ஆண்களும், பெண்களும் உடல் வலிமை குன்றி மனவலிமையும் குன்றி இருக்கின்றனர். மேலும் மனிதன் நூறு ஆண்டுவாழ்வதுமில்லை; அரை நூற்றாண்டு வாழ்க்கைகூட. சராசரியாகக் கணக்கெடுப்பின், மக்கள் வாழ்வதில்லை எனத் தெளியலாம்.

தமிழகம் பழமைபோல் இல்லை. மக்கள் எல்லாம் இன்று மக்களாக வாழும் நிலை இல்லை; மக்கள் பலர் நன்னெறியிலே செல்லவுமில்லை. அழகு இல்லை; ஒளி இல்லை. உள்ளத்திலே வீரம் இல்லை. உரமும் இல்லை. சுருங்கக் கூறின் மக்கள் வாழ்க்கை வாழ்க்கையாகவே இல்லை.

மனிதன் இப்பொழுது வறுமையைத் தானே தேடிக்கொள்கிறான் சூழ்நிலையும் அவனுக்குத் தேடிக் கொடுக்கிறது.

சூழ்நிலையால் பெறும் வறுமையை ஒருவாறு போக்கிவிடலாம், ஆனால் தானே பெறும் வறுமை வாட்டிவிட்டுத்தான் செல்லும்.

விதியையும் மதியால் வெல்லலாம். ஆனால் விதியை வெல்ல மதியை பயன் படுத்தியவர் எத்தனைபேர்? மிகச்சிலரே என்றுபதில்கூறலாம். மதியைப் பயன்படுத்துபவர்கள்தாம் முன்னேறுவர். மற்றையோர் நிச்சயம் நிலை தவறிக் கீழேதான் வீழ்வர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று புறநானூறு கூறுகின்றது. பல நாட்டுமக்களுக்கும் அது எடுத்துக் கூறுகிறது, தந்நலம் கருதவில்லை.

எங்குக் காணினும் தன்னலம் தானே காணுகிறது. மக்களிடையே பரந்த மனப்பான்மை காணப்படவில்லையே. தான் வாழ வேண்டும், தன் உற்றார் உறவினர் வாழ வேண்டும், தன் ஊர் வாழ வேண்டும், தன்நாடுவாழவேண்டும் என்றுதானே காணுகிறோம்.

சிறப்பாகச் சொல்லப் போனால், தான் வாழவே எண்ணுகின்றார்களேயன்றிப் பலரும் வாழ எண்ணுகின்றார்களா? பலரும் வாழ வேண்டும் என்று கூட எண்ண வேண்டுவதில்லை, உற்றார் உறவினர்களாவது வாழ எண்ணுகின்றார்களா? இல்லையே.

சுற்றத்தினரிடம் என்ன குற்றம் இருக்கின்றது என எண்ணி ஆராய்ந்து, அவர்களை நீக்கித் தாம் மட்டும் வாழ எண்ணுகின்றார்களேயன்றி 'குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' என்பதை எண்ணிக் குற்றத்தைப் பாராமலோ பார்த்தாலும் குற்றத்தைத் திருத்தி வாழவோ எண்ணும் மக்கள் எத்தனை பேர்?

உள்ளத்தே பிறரைக் கெடுத்துத் தாம் மட்டும் வாழத் தானே எண்ணுகின்றனர் பலர். அவ்வாறெனின் அவர் வ[illegible] வரும் மக்கள் பிறர் சிறக்க, பிறர் வாழ எண்ணுவார்களா? எண்ணின், இன்று ஒருவரை ஒருவர், நம்பி இன்புற்று அமைதியுடன் வாழவல்லவா வழிவரும். வஞ்சனையே கலந்தமனம் பொறாமையே உள்ள மனம் எங்கே அமைதியுடன் வாழும்? அவனால் சிந்திக்கத்தான் முடியுமா? சிந்திப்பின் மதியினால் விதியை இன்புற்று அல்லவா வென்று வாழ்வான்.

பழந்தமிழ் மக்கள் தந்நலம் கருதாதவர்கள். எனவே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றார் கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர். அவரிடையே பரந்த மனப்பான்மை காணப்படுகின்றது. தம் நாட்டுக்கு மட்டுமல்ல பிற நாட்டுக்கும் அன்பராக இருக்கின்றார். அவர் எல்லா மக்களிடமும் அன்பு பூண்டு ஒழுகுகின்றார் என அவர் கூறும் சொல் தெரிவிக்கின்றது அவர் எல்லா ஊரிலுமுள்ள எல்லாமக்களும் என் சுற்றத்தார் என எண்ணிக் கூறியிருக்கிறார் அவரிடமுள்ள பரந்த மனப்பான்மை, சிறந்த அன்பு இன்றுபலரிடையே காணப்படுகின்றதா?

(வரும்)

## தொழில் பகுதி — உடல் வலிமைக்கு

# பூலோக கற்பகம்

— சி. து. க. —

விண்ணவர் தரு எனப்படும் கற்பகம், வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் விரைந்தளிக்க வல்ல தென்பர். ஆனால் அத்தகைய பயன்மரத்தினை நேரிற் கண்டவரில்லை. அது விண்ணுலகத்துப் பொருள். நம் வாழ்வுக்குத் தேவையான பல பொருள்களையும் கொடுத்துதவும் பனைமரத்தின் பெரும்பயனை எண்ணும்போது அதனைப் பூலோக கற்பகம் என்று பாராட்டாமல் இருக்க முடியாது.

பனைமரம் புல்வகைகளிற் சேர்ந்த தென்று தொல்காப்பிய நூற்பாவால் தெரிகிறது.

'புறக்காழனவே புல்லென மொழிப; அகக்காழனவே மரமென மொழிப' என்பதிலிருந்து புறத்திற்காழுடைய பனை, புல்லினத்திற் சேர்ந்ததாகிறது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே நம் முன்னோர், பனையின் பெரும்பயனை நன்கு உணர்ந்து போற்றி வந்துள்ளார்கள். பழந்தமிழ் இலக்கியங்களை இன்று நாம் உணர்ந்து போற்றும் நிலையில் காத்துத் தந்தது பனையின் உதவியே ஆகும். தஞ்சை நூல் நிலையத்தில் இன்னும் பழைய ஓலைச் சுவடிகள் மிக உயர்வாக பாதுகாக்கப் பெறுகின்றன. பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே நம் முன்னோர், பனை ஓலையில் எழுதும் வழக்கத்தை மேற்கொண்டார்கள் சுமார் இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் காகிதம் இந்தியத்துணைக் கண்டத்தில் உபயோக்கப் பெற்றது. அதற்கு முன் எழுதப் பெற்றதெல்லாம் பனைவோலையில்தான். பனை ஓலைக்குரிய 'ஏடு' என்ற பெயர், நூலுக்கு வழங்கிவந்தது. இதற்கொரு எடுத்துக் காட்டு.

'பாடை ஏறினும்
   ஏடது கைவிடேல்'
'வெள்ளேட்டங்கண்
   வித்தக மெழுதிய...'

என்றவரிகளிற் காணும் 'ஏடு' என்பது அக்காலத்தில் நூல் அமைத்தற்குக் கருவியாயிருந்தமை காட்டுகின்றது.

ஓலைச் சுவடிகளில் துளையிட்டுக் கயிறு கோத்துக் கட்டுவது அக்கால வழக்கம். ஓலையிற் பொதுத்தலாகிய இவ்வழக்கத்தால் சுவடிகட்குப் பொத்தகம் என்று பெயர் வழங்கிவந்து இன்று புத்தகம் என்று மருவி வழங்குகிறது. பனை, புத்தமாக மட்டும் பயன் பெறவில்லை, மக்கள் வாழ்க்கைச் சாதனருகள் பலவற்றிற்கும் உதவியது. பனை ஓலை மக்கள் அமரும் ஆதனமாகப் புனையப்பெற்றது.

தாலப் புல்லின்
   வால்வெண் தோட்டுக்
கைவன் மகடூஉக்
   கவின் பெறப் புனைந்த
செய்வினைத் தவிசு (சிலம்பு)

என்பதால் பனந்தடுக்குகளும் பாய்களும் அன்று பெற்றிருந்த உயர்வு நன்கு விளங்கும். பனை ஓலைகளாலும் குருத்துக்களாலும் கிலுகிலுப்பை பவண்ணக் கூடைகள் முதலிய எத்தனையோ அழகு விளையாட்டுப் பொருள்கள் செய்யப்பெற்றன. சித்திர வேலைப்பாடு மிகுந்த விசிறிகள் கோடை வெயிலுக்குக் குளிர்ச்சிகாண உதவின பனை ஓலையால் அழகாகக் கோத்தமைக்கப் பெற்ற குடைகள் மழைக்காலத்துக்குப் பேருதவி புரிந்தன. பனை ஓலைக் கொத்தால் செய்யப்பெற்ற மடக்குகள் சோறும் நீரும் உண்ணும் பாண்டங்களாகப் பயன்பட்டன.

தோணல முண்டு
   துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட
   குடையோ ரன்னர்
(பாலைக்கலி)

என்பதில் குடையென்பது பனையோலை மடக்கினையே குறிப்பிடுகின்றது,

முற்காலத்தில் உணர்வு மயக்கும் கள்ளினைத் தந்து வந்த பனை, இன்று இனிய பதனீர் உதவுகின்றது. இனிய சாற்றினால் உண்டாகும் பனங்கற்கண்டு வெல்லம் என்பன மக்கள் நல்வாழ்வுக்குப் பெரிதும் உதவுகின்றன. 'பனாட்டு' என்ற சொல்வழக்கு மிகப் பழைய காலத்திலேயே பனை வெல்லம் பயன் பட்டு வந்தமை விளக்கும்.

பனைஓலை, சாறு தவிர ஏனைய பொருள்களும் பெரும் பயன் தருவனவே. கோடைக்காலத்தில் இளைப்பினைப் போக்கும் இனிய பனை நுங்கின் தீஞ்சுவையினை அறியாதார் நம்மில் மிகச் சிலரே இருப்பர், பனங்கிழங்குகளும் உணவுக்குதவுவனவே. பனை நாரும் ஓலையும் காழ்ப்பேறிய துண்டங்களும் வீடுகள் கட்டப் பயன்படுகின்றன. திருவாங்கூர்ப் பகுதிகளில் பனை நாரினாற் கயிறுகளும், கம்பளங்களும் துடைப்பருகளும் உண்டாக்கப் பெறுகின்றன, எத்துணையோ மக்கள் பனையின் தொழிலாற் பயன் பெறுகின்றனர். தென்னையும் இவ்வாறே பலவகையிற் பயன்படினும், பனை அதனைவிட ஒரு மடங்கு மேலாகவே மக்

(8-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சோழநாடு (தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்) அடிக்கடி புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுவதைக் கண் கூடாக நாம் காண்கிறோம். புயலால் ஏற்படும் சேதமும், பஞ்சமே யாகும். அத்தகைய நேரங்களிலும் பஞ்சவாரியார் தத்தம் பகுதியில் உள்ள குறைகளை அரசனுக்கு எடுத்துக்கூறி அதற்கு வேண்டிய நிவாரணத்தைப் பெற்று மக்களுக்கு வழங்கியிருக்க வேண்டும் என்பதும் யூகமாக இருக்கிறது.

இந்த ஊர்ச்சபையின் தேர்தல் முறையைக் காட்டிலும் தற்காலம் நடக்கும் தேர்தல்முறை எவ்வாறு சிறந்ததெனக் கூறிவிட முடியும்? இன்றையத் தேர்தல் முகாம்களில் பணியாற்றியவர்களுக்கு இதன் உண்மை நன்ருகப் புலப்படும்.

எத்தனையோ பேர்கள் தேர்தல் முகாமுக்குச் சென்றுவாக்குச் சீட்டுகளை எப்படிப் போடுவது.எதில் போடுவது என்ற முடிவு தெரியாமலே பெட்டியில் போடுவதற்குப் பதில் பெட்டியின் மேலே வைத்துவிட்டுப் போய் விடுகிருர்கள் இவை போன்ற சீட்டுகள் அந்த முகாமில் வேலை செய்யும் தலைமை அதிகாரியின் மனப்பாங்கைப் பொறுத்து உயிர் இழப்பதோ அல்லது இறப்பதோ செய்கின்றன. சுமார் ஐம்பதினுயிரம் வாக்காளர்களை யுடைய ஓர் இரட்டைத் தொகுதியில் பதினோராயிரத்து இருநூற்று இருபதுஒட்டுகள் செல்லாதவை! எழுத்தறிவில்லாதவகளுக்கு வாக்குரிமை இருப்பதால் இன்னும் இவைபோல் வன வாகிய பலதவறுகள் நேர்கின்றன என்பதே சிறியேனுடைய எண்ணம்.

இத்தகைய குறைகள் யாவும் இன்றித் தாம் தேர்ந்தெடுக் விரும்பும் நபரின் பெயரைத்தம் கையாலேயே எழுதித் தேர்ந்தெடுத்த சோழர்காலத் தேர்தல் முறையே சிறந்ததென்பதுஇதுகாறும்கூறியவாற்ருல் விளங்குகிறதல்லவா.

* * * *

---

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்றவார முல்லைக் கொடியில், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரைப் பற்றிய சிறு குறிப்புக் காணப்பெற்றதனை அன்பர்கள் அறிவார்கள். பத்துப்பாட்டுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையின் அருமை பெருமை [illegible] ணர்வார்க்குத் தான் [illegible] நன் [illegible] பாணாற்றுப்படையின் [illegible] ஆசிரியர் இன்னார் என்று தெரிந்து கொள்ளும் அளவோடு நம்மவர் ஆராய்ச்சி நின்றுவிடுகிறது. புலவர் பெருமான் பிறந்தவூரை ஒருதரமாவது நேரிற் சென்று காணவேண்டும் என்ற ஆர்வம் நமக்கு ஏற்படாதது நம் தவக் குறை என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

கல்கி ஆசிரியர் முயற்சியினுல் அண்மையில் எட்டையாபுரத்தில் பாரதியார் நினைவு மாளிகை ஒன்று எழுப்பப்பட்டது நம்மவர்க்குத் தெரிந்ததே. உண்மைக் கலையார்வமுள்ளவர்க்குக் கல்கி ஆசிரியர்முயற்சி ஓர் எடுத்துக் காட்டு. இனியாவது தமிழ் மக்கள் செய்ய வேண்டுவது இன்னதென்று உணர்ந்து செயலாற்றுவது நல்லது. இடைக்கழி நாட்டு நல்லூர் போன்ற ஊர்களைக் கலையார்வமும் தமிழ் ஆர்வமும் மிகுவிக்கும் புண்ணிய தலங்களாகச் சிறப்பிக்க ஆவன.செய்வதில் அறிஞர்கள் ஊக்கம் சிறக்குமாக!

சி. து. க.

* * * *

---

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN
எலிபெண்ட் கிசான்

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53. கிடங்குத் தெரு. சென்னை 1.

## குருகுலச் செய்தி:

### ஆசிரியர் விரிவுரைகள்

### (நடக்க இருப்பன)

சூனம்பேடு:

30-3-57 சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு "திருஞான சம்பந்தர்" விரிவுரை.

சென்னை:

31-4-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை சென்ன மல்லிகேஸ்வரர் கோயிலில், 'பெரிய புராணம்' விரிவுரை.

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அதிலும் சிறப்பாக ஏழை மாந்தருக்கு உதவி செய்து, அவர்தம் வாழ்வின் உயிர் நாடியாக விளக்குகிறது.

பனையின் உறுப்புக்களுள் ஒரு சிறிதும் வீணாவதில்லை. பனங்காய்கள் நீக்கப் பெற்ற குலைக்காம்புகளும் மட்டைகளும் ஓலைகளும் அடுப்பெரிக்க உதவுகின்றன, இன்னும் பல வழியில் பயன்படும் பனையினைப் பூலோக கற்பகம் என்று கூறுவது பொருத்தமல்லவா.

இத்தகைய அரிய மரத்தின் பயனை நம்மவர் இன்னும் நன்கு உணர வேண்டும். இன்னும் வியத்தகு நுட்பமான பொருள்கள் பல, பனையின் உதவி கொண்டு உருவாக்கலாம். பனையின் செல்வங்களைக் கோடி கோடியாக வெளிநாடுகளுக்கு அனுப்பி நாட்டுச் செல்வத்தைப் பெருக்கலாம். பல குடிசைத் தொழில்களைச் செழுமையாக வளர்க்கலாம்.

அதற்கு முதற்படியாக நாடெங்கும் இன்னும் கோடிக் கணக்கான பனைமரங்களை வைத்து வளர்ப்போம். 'பண்ணவர் உலகம் பயில்தரு அனைய' பனைவனங்கள் நாடெங்கும் செழிக்கச் செய்வோம். பிறந்து வளரும் சிறியபருவத்திலிருந்தே ஏழைக்குதவும் இனிய மாட்சிமையுடைய பனைமரத்தினுற் பெரும்பயன் அடைய ஆவன செய்ய முற்படுவோம்.

* * * *

## குருகுலத்தைச் சேர்ந்த திரு. சி. எஸ். தமோதர முதலியார் அவர்களின் புண்ணியச் செழுஞ் செயல்கள்

'என்கடன் பணி கிடப்பதே' என்னும் ஆன்றோர் அருண்மொழிகளுக்கு இலக்கியமாக உலகில்வாழ்பவர் திரு. சி. எஸ். தாமோதர முதலியார் ஆவர். நாட்டில் இறையுணர்ச்சியை இனிது பரப்பும் தொண்டில் ஈடுபட்டு வாழும் திரு முதலியார் அவர்களைப் பற்றி நம்மவர் அனைவரும் நன்கு உணர வேண்டுவது இன்றியமையாதது.

11-10-1894ல் ரேணுகொண்டாவில், தெய்வந் தெளிந்து வாழும் நற்குடியொன்றில் திரு. முதலியார் பிறந்தார். சென்னையிற்பச்சையப்பன் கல்லூரியிற் கல்வி பயின்று அஞ்சல் 'இலாகா'வில் அலுவலாற்றியமுதலியார், ஈரோடு மஹாஜன உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. ரா. திம்மப்பய்யர், சென்னை, திருமுருக கிருபானந்த வாரியார் இவர்களிடம் தமிழும் சமயமும் நன்கு பயின்று அறிவார்ந்து மகிழ்ந்தார். இன்றும் வாரியாரிடம் திரு முதலியாரவர்கட்கு ஈடுபாடுமிகுதி, சென்னையில், இறைவழிபாட்டுக் கூடங்களிற் றவறாது கலந்து கொண்டு மகிழ்ச்சியடைகிறார் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தாரோடும் திரு. ஆசிரியரவர்களோடும் சென்று தெய்வத் திருப்பதிகளைக் கண்டு வழிபட்டுள்ளார். வாரியாருடன் இவர் ஈழம், மலைநாடு கொங்கு நாடு, துளுவம், வடநாடு முதலான இடங்களுக்குச் சென்று திரும்பியுள்ளார். பொதுவாக இத் துணைக் கண்டத்தில், சென்று இவர்வழிபடாததலங்களே இல்லை என்று சொல்லலாம்.

1950 ம் ஆண்டிலிருந்து திரு. முதலியார் அவர்கள் தெய்வத் திருநெறி வெளியீடுகள் பல்லாயிரக் கணக்கில் வெளியிட்டுக் கடவுளுணர்ச்சி சான்ற மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றார்கள். சமய வேறுபாடு, மொழி வேறுபாடு என்பன கருதாமல் தெய்வவுணர்ச்சி பரப்பும் ஒரே நோக்கத்தோடு இத்தகைய வெளியீடுகள் ஆயிரக் கணக்கில் வெளியிட்டுவருவது கருதத்தக்கது. இச்செயலருமைநோக்கிநல்லறிஞர் பலர் அவரைப் பல்லாற்றானும் ஊக்கி வருகின்றனர். அவருக்கு ஒரு புதல்வன் நான்கு புதல்வியர் உள்ளனர்.

முதலியார் இன்னும் பல்லாண்டுகள் நோயகன்ற நல்வாழ்வு வாழ்ந்து புண்ணியச் செழுந்தொண்டுகள் மேற்கொண்டு மகிழ்வில் திளைக்க இறைவன் திருவருள் துணை செய்க என நெஞ்சார நினைக்கின்றோம்.

* * * *

## மணித்திரள்

பூமி முழுதும் திரிந்து அலைந்தாலும் தூய உண்மை அறத்தைக் கண்டறிய முடியாது. அது உன் உள்ளத்திலேயே இருக்கிறது.

— இராமகிருஷ்ணா

* * * *

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.